# 12

# மக்பராவைத் தரிசிப்போம்



இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்குமான வழிகாட்டல்களை முன்வைக்கிறது. பிறப்பு, வாழ்வு, மரணம் என எல்லா விடயங்களிலும் பொருத்தமானதும், சரியானதுமான போதனைகளைக் கற்றுத் தருகின்றது. இந்த வகையில், உலகில் வாழ்ந்த மனிதன் இறந்த பின்னர் அடக்கம் செய்யப்படுகின்ற இடம் தொடர்பாகவும், அங்கு பேண வேண்டிய ஒழுங்குகள் தொடர்பாகவும் இஸ்லாம் போதிக்கின்றது.

இஸ்லாமிய நடைமுறையில், மரணித்தவர்கள் அடக்கப்படும் இடத்தை 'மக்பரா' என அழைப்பர். புதைகுழியை 'கப்ர்' என்பர். அந்தக் கப்றுகளைத் தரிசிப்பதை நபி ﷺ அவர்கள் அங்கீகரித்துள்ளார்கள். ஸஹாபாக்களைத் தரிசிக்குமாறு ஏவியதோடு தானும் பல தடவைகள் கப்றுகளைத் தரிசித்திருக்கிறார்கள். இதனை அறபியில் 'ஸியாரதுல் குபூர்' என இஸ்லாமிய அறிஞர்கள் சுட்டிக்காட்டுவர்.